செ.வெ.எண் : 48 / ஜூலை நாள் :23.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் சார்பாக புதிய நவீன மீன்விற்பனை நிலையம்

## மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் திறந்து வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, ஓட்டபாலம் அருகே இன்று (23.07.2017) மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன மீன் விற்பனை நிலையத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

தமிழ்நாடு அரசு மீனவர்கள் நலனுக்காக பல்வேறு மீனவர் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதேபோல, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் லிமிடெட் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவதுடன், மீன்வளத்துறை வாயிலாக செயல்படுத்தப்படும் பல்வேறு மீனவ நலத்திட்டங்களை மீனவர்களுக்கு சிரமமின்றி கொண்டு சேர்க்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. தற்பொழுது இணையத்தில் 477 கடல் மீனவ கூட்டுறவு சங்கங்கள், 141 உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்கங்கள், 158 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இணையத்தின் வருவாயினை பெருக்கிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தற்போது தலைமை கூட்டுறவு இணையம் மற்றும் உறுப்பினர் சங்கங்களின் மீன் விற்பனையினை மேம்படுத்திடவும், பொதுமக்கள் நியாயமான விலையில் தரமான மீன்களைப் பெற்று பயன்பெறும் விதமாகவும், பரமக்குடி , ஓட்டபாலம் அருகே தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் புதிதாக நவீன மீன் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நவீன மீன்விற்பனை நிலையத்தினை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன் அவர்கள் இன்று துவக்கி வைத்தார்.

இந்த மீன்விற்பனை நிலையத்தில் வஞ்சரம், விரால்,நவரை, விளை, ஊலா, இறால், கனவாய், நண்டு உட்பட அனைத்து வகையான மீன்களும் தரமான நியாயமான விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன. இதேபோல இராமநாதபுரம் நகரிலும் கடந்த மே-2017 முதல் புதிய நவீன மீன் விற்பனை நிலையம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.எஸ்.முத்தையா, மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் (பொ)திரு.அமிர்தலிங்கம், தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணைய தலைவர் திரு.எம்.சேவியர் மனோகரன் , மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.ஐசக் ஜெயக்குமார், டாப்கோபெட் திட்ட அலுவலர் திரு.த.நடராஜன், உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**